# THE MORNING STAR.

Vol. 62. Jaffna, Thursday 8th of May. 1902. No 10


Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.


THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



The Lady Gordon and S. S. Amra are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

| | | |
|---|---|---|
| S. S. Amra | 14th May | 1902. |
| Lady Havelock | 27th " | " |

Via Point Pedro.

| | | |
|---|---|---|
| Lady Gordon | 19th May | " |

W. MATHER & SON, Agents

Alexander Bros. & Co

THE LARGEST GENERAL STORES IN THE NORTH.

Departments:—Oilmanstores of every Description. Medicines, Soaps, Perfumery, Guns, Bicycle Accessories, Lamps, Watches, Clocks, Platedware, Cutlery, Steel trunks.

TAILORING DEPARTMENT.

We have some first class men under us. Trial Solicited. Work finished in shortest time possible.

☞ Our Quinin Water. All houses should have a bottle of this.

*ALEXANDER BROS. & Co.*

Importers of British & Foreign goods.

*THE JUNCTION, JAFFNA.*

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made Between, Jaffna, Batticaloa, and Colombo Both by wire and Draft To and From

**Colombo and Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer above Rs.500.00 | 1° |
| on wire transfer under " 500.00 | 2° |
| on draft on sums above " 500.00 | ½° |
| on draft on sums under " 500.00 | 1° |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on wire transfer | ½° |
| Commission on Draft | 1° |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1° |
| Commission on Draft | ½° |

To and from

**Colombo & Batticaloa**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1½° |

Commission on Draft and cashing Colombo cheques ¾°/c on sums above Rs. 250.00
1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft { Madras & Calcutta ¾°
{ Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER
Managing Director.

BRODIE & Co. Colombo.

Importers of *Oilmanstores Wines and Spirits, Estate Tools and Requisites* at lowest rates. Price list on application.

*"Red Star" Portland Cement*

As supplied to the Madras Municipality Guaranteed Best Quality. Rs 10 per barrel

BRODIE & Co. Colomb.

MESMERISM AND YOGAM

This book compares Mesmerism with மந்திரசித்தி. This explains the marvellous secret of miracle-working, and the origin of many religions.

Price Rs. 1-50 will be sent bp V. P. Post. Obtain from C. T. Pillai, Batticotta, Jaffna.


NELLORE GIRLS' BOARDING SCEOOL.

The first Term of the New Year will commence D. V. on Monday June 2nd.

The Entrance Examination will be at 9 o'clock that day. Fees payable in advance.

J. I. PICKFORD,
Manager.

JAFFNA COLLEGE.

ADMISSION EXAMINATION.

An examination for admission to Jaffna College will be held on Friday and Saturday, May 23rd and 24th, beginning at 10 A.M. on Friday. Every candidate must bring a certificate of good character from the Manager or Principal of the school where he has been studying. A fee of Re 1 will be charged.. Paper and ink will be provided, also board for the two days.

The subjects of examination are as follows:—

1 Dictation and Translation in both English and Tamil from a sixth Reader or equivalent.
2 English, General and Text as for 7th Standard
3 English Grammar, through Syntax.
4 Tamil Grammar, இலக்கணச்சுருக்கம், or Latin Grammar, through Regular Verbs.
5 Arithmetic, to Compound Interest.
6 Algebra: Addition, Subtraction, Multiplication and Division.
7 Geometry: Euclid, first 25 propositions.
8 Geography, General and especially Europe and Asia.
8 English History, from 1066 to 1688.

Those who have passed in Reading, Writing, Arithmetic, Geography and History in the 7th Standard will be admitted without examination.

Candidates for the Entrance class will be examined in the subjects studied by the last Preparatory class.

Those who have passed the Entrance examination of any Indian University will be admitted to the F. A. class, and those who have passed the F. A. will be admitted to the Junior B. A. class on Monday, the 26th May, the day for re-opening the College.

R. C. HASTINGS.
Principal.

ORDER NISI,

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No. 1263

In the Matter of the Estate of the late Philippupillai Francis of Jaffna Town. Deceased.

Mariyamuttu widow of Philippupillai Francis of Jaffna Town. Petitioner.

1. Francis Joseph of Registrar's office, Batticaloa
2. Francis Philippiah of Jaffna Town
3. Francis Paul of Straits Settlements
4. Francis Savarimuttu of Jaffna Town
5. Anne daughter of Francis of do
6. Elizabeth, daughter of Francis, do Respondents,

This matter of the Petition of Mariyamuttu widow of Philippupillai Francis praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Philippupillai Francis coming on for disposal before W, R B. Sanders Esquire District Judge, on the 18th day of April 1902 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 14th day of April 1902 having been read, it is declared that the Petitioner is the widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondents or any other person shall on or before the 30th day of May 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 18th day of April 1902 W. R. B. Sanders District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1264.

In the Matter of the Estate of the late Sivakamipillai widow of Visuvanatar of Manthuvil Deceased:

Visuvanatar Kanthiah of Manthuvil Petitioner.

1 Arunasalam Thathapillai of Manthuvil
2 Arunasalam Sivirakasam of Varany North
3 Arunasalam Supramanium of Manthuvil Respondents,

This matter of the Petition of Visuvanathar Kanthiah of Manthuvil praying for letters of administration to the estate of the abovenamed deceased Sivakamipillai widow of Visuvanather of Manthuvil coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 18th day of April 1902 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor, on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 8th day of April 1902 having been read, it is declared that the Petitioner is the son and one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issuedto him unless the Respondent or any other person shall on or before the 30th day of May 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 18th day of April 1902. W. R. B. SANDERS. District Judge.

ORDER NISI

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } 1265.

In the Matter of the Estate of the late Kurunati Chivakuru of Karativu Deceased.

Chivakuru Valuppillai of Karativu Petitioner.

1. Valliammai widow of Kurunati Chivakuru and
2. Chivakuru Tampipillai of Karativu a minor under the guardianship of Valliammai the 1st Respondent Respondents.

This matter of the Petition of Chivakuru Valuppillai of Karativu praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kurunati Chivakuru of Karativu coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 21st day of April 1902 in the presence of G. N. H. Tampoo Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 21st day of April 1902 having been read, it is declared that the Petitioner is the son of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 28th day of May 1902 show suffieient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 21st day of April 1902 W. R. B. Sanders District Judge

## Local and General.

**Missionaries** Rev. and Mrs. G. G. Brown have returned from Nuwara Eliya to their station at Udupitty. Miss Howland and Miss Root arrived this week at Uduvil from the Pulney Hills.

Miss Case and Miss Beeching have also returned to Copay.

Rev. and Mrs. R. C. Hastings are expected in a week or two.

**The late Rev. John Kilner D.D.** A marble tablet was erected by Mr.T.M. Tampu in St.Peter' sChurch, Pettah, in memory of the Rev. John Kilner. It is a neat piece of workmanship prepared in England. The tablet is fitted in the wall of the church near the right hand side of the Sacrament table. The following words are inscribed in the tablet. "In grateful memory of the Rev. John Kilner, D.D., for 28 years a wise, devoted and successful missionary to the Tamil people who loved them, and afterwards a General Secretary to the Wesleyan Missionary Society. Born 1824. Died 1889"

**Pungudutive.** Mr. N. J. Lawrence the first Medical officer in charge of the Govt. Dispensary at Pungudutive is transferred to Marichukaddy. Before his departure the people of the island congregated at the school to bid farewell to their beloved physician. After the farewell meeting Mr. and Mrs. Lawrence in company with the other Christians went into the American Mission Chapel for a thanksgiving service. A sum of money was paid to the pastor for conducting the service. We wish them a prosperous life. *Com.*

**Obituary.** The death of Mr. C. Howland Chellappah cousin of the Rev. W. P. S. Nathanael occurred at Manippay on Wednesday morning 23rd April. The deceased gentleman belonged to a respectable Hindu family in Jaffna and in his younger days was a student of the well-known Arumuga Navalar Avergal. Though he was a staunch Sivite in his earlier days by coming under the influence of the American Missionaries at Batticotta he became a convert to Christianity and was employed as Tamil Pundit in the C. M. S. Girl's Boarding School in Colombo in the year 1873 which position he held till his death. He was much respected by the leading Tamils in Colombo on account of his high social position and Tamil scholarship. He was ailing for some months past with heart disease and his case being pronounced hopeless he retired to Jaffna and was under Dr. Scott's treatment. In spite of careful nursing and medical aid he succumbed to the disease a few days after arival. The funeral according to the Christian rites was conducted by the Rev. S. Elyathamby assisted by Dr. Scott. He leaves behind a large family to bemoan his loss. *Com.*

With much regret we record the death of Mr. T. Chellappapillai B.A B.L. retired Chief Justice of Travancore, which took place at his residence in Wannarponnai on the 2nd inst. He retired several years ago and he was in the receipt of a good pension remaining all the time in Jaffna. The deceased was one of the noble sons of Jaffna and his death will be much regretted.

**Customs.** We are informed that Mr. Thomas, second clerk Jaffna Customs goes to Colombo and Mr. P. E. Francis succeeds him as second clerk. Mr. Katheravalu from Mannar will take up Mr. Francis' place at Jaffna and Mr. Livers is likely to go to Mannar once more.

**Police Court.** Mr. S. Sapapathy Interpreter Modr. has gone to Colombo on two months leave and Mr. M. Vytialingam of Chundicully has been appointed to act for him. It is creditable that Mr. Vytilingam has by his perseverance made himself fit to act as a Modaliar with acceptance, from the position of Proctors' clerk with which he began life.

**Inspector of Schools.** Mr. R. H. Leembruggen proceeded to Colombo on the 30th ult. to attend the educational conference and he was expected to return on the 7th inst.

**Supreme Court.** The Chief Justice having gone to England on leave, Mr. Justice Moncrieff will again be Acting Chief Justice and Mr. Joseph Grenier will be a Puisne Justice.

**A case of Murder.** A native of India who was living for several years in the town was found on the 6th inst. dead apparently by violence, and his body thrown with hands tied up behind it, in the ditch that surrounds the Fort on the North. Prior to the 6th inst. he was boarding in the eating house of one Valan that adjoins the arrack tavern. The inmates of the eating house of whom a large portion are females were at once taken up before the Magistrate and initial proceedings have been taken. It is surprising that such acts of terrible violence and unsightly scenes should occur at a call distance from the Police station.

# உ த ய தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

கூஉம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௯௦௨ம் ௵ வைகாசி ௴ அ௨ வியாழக்கிழமை. [சங்கியை, கO



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின

புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில்கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902வைகா.௴19௳ |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | ,, 27 |
| அம்ரு காங்கேசன்துறையிலிருந்து பாம்பன்வழியாக | " " 14 |

Wm Mather & Son. Agents


### விளம்பரம்.

அளவெட்டிகுடி முருகேசுபெண்இளையாச்சியாகிய நான்அறிவிப்பது: எனதுபுருஷன் சிற்சிங்கர்முருகேசு என்பவர் மறுபேரால்அனுப்பப்பட்டு எனதுநகைகளையும் இன்னும் சிலசாமான்களையும் எனது சீதன உறுதியையும்எனதுசொந்தப்பணங்கொடுத்து அவர்பேருக்கு எழுதப்பட்ட கோட்டுகளையும்களவாடிக்கொண்டுபோயிருப்பதினாலும் குறித்தசீதனஉறுதியினால்எனது கைஒப்பமிட்டு கோட்டு அல்லது வட்டியுறுதி எழுதுகிறதற்குயோசனைபண்ணியிருப்பதைஅறிகிறபடியாலும் குறித்த சிற்சிங்கர் முருகேசுவசம் எவ்வகைச் சாதனங்களையும்வேண்டுபவர்கள் எனதுசமுகமின்றிக்கொடுக்கல்வாங்கல்களை நடத்தப்படாதென்றுதடைபண்ணுகிறேன். மேலும் எங்களிருவருக்கும் ஓர் வழக்கு நடக்குதென்பதை இத்தால் சகல நொத்தாரிசுமாருக்கும் மற்றுமனைவருக்கும் அறிவித்து விளம்பரப்படுத்துகிறேன்.

7-4-02. இளையாச்சிபிள்ளை.

### NOTICE.

க௮௯௮ம் ௵ மார்கழி ௴ ௨௩ ந் திகதியில், நொத்தாரிசு செல்லையா சுப்பிரமணியம் முகதாவில் ௩௮௪௩ம் இலக்கத்தில் சீ. ம. மு. தம்பிசாய்புஆகியநான். சீ. ம. மு. முகம்மது அசனுலெவ்வைக்கு எழுதிக்கொடுத்த சென்றல் அற்றோணித்தத்துவத்தை இத்தால் அழித்துவிடுகிறேன். குறித்த தத்துவத்தின்பேரால் சீ ம. மு. முகம்மது அசனுலெவ்வை இனிமேல் எனக்காக யாதொரு காரியமும் எந்தஇடத்திலும் செய்ய அல்லது செய்விக்க அவருக்கு உரித்தில்லை. அப்படி அவர் செய்கில் அல்லது செய்விக்கில் அக்காரியங்கள் பெலப்பற்றதாயிருக்குமென்று சகலரும் அறிந்துகொள்ளவும்.

இப்படிக்கு, சீ. ம மு. தம்பிசாய்பு.

யாழ்ப்பாணம், க௯௦௨ம்௵ வைகாசி ௴ ௬௨.

### சுவிசேஷ சங்கம்.

இச்சங்கத்தின் வருஷாந்தக்கூட்டம் இந்தமாதம் 29 திகதி வியாழக்கிழமை காலை 10. 30 மணிபோல உடுவிற் தேவாலயத்தில் வைக்கப்படும். சங்க விருத்திக்கான சுயநறுப்புவாரம் இந்தமாதம் 11 ந் திகதி ஓய்வுநாள் துவங்கி 18 ந் திகதி ஓய்வுநாளோடே முடியும் கிறிஸ்த குடும்பங்களும் பள்ளிக்கூடங்களும் தனித்தனியான கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் இராச்சிய விருத்தியை நினைத்து ஒறுத்துச் செபத்துடன் கொடுப்பார்களானால் இவ்வருஷஞ் சங்கத்துக்கிருக்குங் கடன் நீங்குமென்று நம்புகிறோம்.

அந்தகாரத்திலிருப்பவர்களை ஆச்சரியமானஒளியினிடத்துக்குக் கொண்டுவரும்படி செய்யுந் தர்மசகாயம் தேவனுடையபார்வையில் விலையேறப்பெற்றது. மெய்யான கிறிஸ்த விசுவாசிகளின்வாஞ்சையென்ன? கிறிஸ்துவின் இராச்சியம் விருத்தியடையவேண்டுமென்பதேயாம். இந்த உண்மையான எழுச்சி கிறிஸ்த விசுவாசிகளின் உள்ளத்தில் நிலைப்படும்போது தூக்கமாய் அல்லது அமைதலாய் இருக்கமாட்டார்கள். உலகத்திற் செய்யப்படும் எந்தப் பெரிதான வேலையிலும்பார்க்க, மனுஷசாதியாரை இரட்சித்துக்கொள்ளும்படி செய்யப்படும் வேலையே மெய்ப்பலனுள்ள வேலை. இதற்காகக் கொடுக்குங்கொடையே அழியாத கொடை. இச்சங்கத்துக்கு அனுசாரிகளும் பிள்ளைகளுமான பலர் இலங்கையின் பலபாகங்களிலும், இந்தியாவின் விசேஷ ஸ்தானங்களிலும் பினாங்கு, சிங்கப்பூர், ஆபிரிக்கா முதலான தேசங்களிலும் நல்நிலைமையில் உயர்ந்திருக்கிறார்கள். தாய்ச்சபைகளின் விருத்தியையும் சுவிசேஷ சங்கத்தின் பொறுப்பையும் நன்மையையும் நினைந்து கிரமமாய்க் கொடுத்துவருவார்களானால் பெரிய எழுச்சியான வேலை சபைகளிலுஞ் சங்க ஸ்தானங்களாகிய தீவுகளிலும் நடைபெறும். வேலணையில் கட்டப்படும் வீடு முடிக்கவேண்டும். மூன்றுவருஷங்களின்முன் வாக்குப்பண்ணினகாசைச் சிலர் இன்னுங்கொடுக்கவில்லை. தயவாய் அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். வருஷாந்தக் கூட்டத்துக்குமுன் சங்கத்தின் பொக்கிஷகாரனாகிய Dr. D. P. Mann இடத்தில்எதும் தர்மசகாயமான பணத்தை அனுப்பக்கூடுமென்று காத்திருக்கிறோம். வருஷாந்தக்கூட்டத்துக்குப் பலர் வர உற்சாகமாயிருப்பார்களாக. வெறுங்கையோடே யல்ல மனப்பூர்வமான கொடையினால் நிறைவுண்டாகும்படி தேவாவியின் ஏவுதல்உண்டாவதாக.

S Eliatamby. Secy. N. E. S.

## உ த ய தா ர கை.

### க௯௦௨ம் ௵ வைகாசி ௴ அ௨.

### புதியதேசாதிபதி.
### The Lieut—Governor.

அதியுத்தமமகத்துவந்தங்கிய தேசாதிபதி சேர். யோசேவ் உவெஸ்ற் றிட்சுவே கே. ஜி. எம். ஜி, கே. ஜி. வி, கே. ஜி. எஸ். ஐ. அவர்கள், லீவில் சென்றமாதம் 24 ந் திகதி இங்கிலந்துக்குப் பிரயாணமாய்விட்டமையால், உபதேசாதிபதியுங் கொலோனியல்சக்கிடுத்தாருமாகிய மெஸ். எவ்ருட் பேடினன்ட் இம்தேண் சி. வி, ஜி. எம். ஜி. அவர்கள் இலங்கைத்தேசாதிபதியாய்ச் சத்தியஞ்செய்து ஆளுகையேற்றனர். மெஸ். தைறெல் அவரின் இரகசியலிகிதராயும், லெப்றினன்ற் சேர். பிருன்சிஸ் பேடெற். லெப்றின்ன்ற் மொன்கொமெறி என்பவர்கள் மெய்காப்பாளராயும் நியமனம்பெற்றிருக்கின்றனர்.

அடுத்துவருஞ் சிலமாசங்களுக்கு இலங்கை அரசாட்சிக் கலினங் கைப்பிடித்து நடத்தப்போகிற தேசாதிபதியும் அவரின் ஆலோசனைக்குரிய சட்டஸ்தாபன சபை அங்கத்தவர்களெல்லோரும் புதிய உத்தியோகஸ்தர்களாயிருக்கின்றனர். மகத்துவந்தங்கிய தேசாதிபதி இம்தேண் அவர்கள் பிரித்தானிய கியனாவிலிருந்து இலங்கைக் கொலோனியல்சக்கிடுத்தாராய் நியமனம்பெற்று இலங்கைக்குவந்திறங்கி நான்குமாதம் மாத்திரமே. அவர்க்கு அடுத்த உத்தியோகஸ்தரும் இலங்கைச்சேனுபதியுமாகிய மகத்துவந்தங்கிய மேஜர் செனறல் சேர். செக்றர் மெக்டனல்ட் அவர்களும் தென்ஆபிரிக்காவிலிருந்து இரண்டோர்மாசங்களின்முன்னரே இலங்கைச்சேனுபதியாய் நியமனம்பெற்றுவந்திறங்கினர். கொலோனியல்சக்கிடுத்தாராய்க் கடமைபார்க்கும் வடமாகாண ஏசண்டர் மெஸ். ஐவேஷ் மூன் அக்கர்தோரில் வேலையாயிருந்தவராயினும் அவ்வுத்தியோகத்திற் புதியவரேயாம். சோதனைகர்த்தராய்க் கடமைபார்க்கும் மெஸ். மறே கீழ்மாகாணத்திலும் வேறுமாகாணங்களிலும் ஏசண்டராயிருந்து புதிதாகவே இவ் வுத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டவர். தனதிபதியாய் வேலைபார்க்கும் மெஸ். டீசோம் செசெலும் கண்டி டிஸ்றிக் நீதவானுமிருந்து இப்பொழுதே இவ்வுத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவே தற்போது சட்டஸ்தாபனசபை அங்கத்தவர்களாய் இலங்கை ஆளுகையை நடாத்தும் தேசாதிபதி, சேனுபதி, கொலோனியல்சக்கிடுத்தார், சோதனைகர்த்தர், தனதிபதியாகிய ஐவரும் புதியவர்களேயாம்.

றிட்சுவேதேசாதிபதியவர்கள் மூன்றுமாசலீவிற் செல்கின்றனராயினும் அவர் திரும்பி இலங்கைக்குவருதல் நிச்சயமன்று என்பது சிலரின் அபிப்பிராயம். இம்மூன்றுமாசங்களுக்கிடையில் தென்ஆபிரிக்ககலகம்முடிவாய்விடச் சமாதான ஆளுகை ஸ்தாபனமாகுமென எண்ணுவதற்கிடமுண்டாயிருப்பதே இவ்வாறு அபிப்பிராயங்கொள்வதற்குக் காலாயிருக்கின்றது. தென்ஆபிரிக்க கலகம் முடிவாகும்போது லோட் மில்னரினிடத்தில் சேர். யோசேவ் உவெஸ்ற் றிட்சுவே அவர்கள் திருன்ஸ்வால் ஒறேஞ்சு நாடுகளின் தேசாதிபதியாய் நியமனமாவரென்பது செகநாட் பேச்சு. இலங்கை, மோறிஷஸ், தொடுவாய்நாடுகள், கொங்கோங் ஆகியாம் கீழைத்தேச கலனிகளினதும், வீச்சி ஆதியாம் பாசிபிக் சமுத்திர கலனிகளினதும் பிரதிஸ்தராய் இராயரின்மகுடாபிஷேக கொண்டாட்டத்துக் கழைக்கப்பட்டுச் செல்லும் றிட்சுவே தேசாதிபதியவர்கள், அவுஸதிரேலியா, கனடா, கேப்கலனி, நியூசிலந்து முதலிய அங்கிலேயநாடுகளிலிருந்து வரும் மந்திரிமார் பிரதிஸ்தர்களோடு கலந்து கொண்டாடி அவர்களின் ஆலோசனைக்கூட்டத்திற் பங்குபற்றும்போது, அவரின் யூகசாமர்த்தியத்தையும் இராச தந்திரோபாய உணர்வையும், யாவரும் விளங்கிக்கொள்ளச் சமயமுண்டாகும்.

### மகுடாபிஷேகம்.
### Coronation.

பிரித்தானியராச்சிய கிரீடாதிபதியாகிய எழாம் எட்வேட் அரசர் ஆனிமாதம் 26 ந் திகதி முடிசூட்டப்படும்போது சமுகமாயிருக்கும்படி அங்கிலேய ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் மாத்திரமன்று பிற ராசாங்கங்களிலுமிருந்து பிரதிஸ்தர்கள் செல்கின்றனர். கீழைத்தேச கலனிகளினதும் பசிபிக்சமுத்திரகலனிகளினதும்பிரதிஸ்தராய்ச் சேர். யோசேவ் உவெஸற் றிட்சுவே அவர்களும், அவுஸ்திரேலியாவிலிருந்து பிரதமமந்திரி மெஸ். பாட்டன், நியூசிலந்திலிருந்து பிரதமமந்திரி மெஸ் செட்டன் ஆகியோருஞ் செல்கின்றனர். இந்தியாவிலிருந்து ஐந்து சுதேசராசாக்கள் செல்கின்றனர். ஜேர்மன்சக்கிரவர்த்தி மாமனாரின் மகுடாபிஷேகத்துக்குத் தமது பிரதிஸ்தராய் என்றிக் இராசகுமாரரைப் பெரும் பரிவாரத்தோடனுப்ப, யாப்பான்சக்கிரவர்த்தி கோமாட்சு இளவரசரை அனுப்புகின்றனர். மற்றும் இராசாங்கங்களிலிருந்தும் பிரதிஸதர்கள் போகிறார்கள். அமரிக்காவிலிருந்து பிரசாதிபதி றூஸ்வோல்றின் புத்திரி மிஸ். றூஸ்வோல்ற் யுத்தக்கப்பல்களோடு செல்லவிருக்கின்றனரெனக் கேள்வி.

மகுடாபிஷேகதினத்தில் ராயர்க்குக்கண்ணியஞ்செலுத்தும்படி 114 அங்கிலேய கப்பல்கள் தெம்ஸ்நதியிற் சேர்ந்திருக்கும். அவற்றுள் 20 பெரிய யுத்தமரக்கலங்களும். 27 தீவிர சுற்றோட்ட மரக்கலங்களுஞ் சேர்ந்திருக்கும். அங்கிலேய அரசுக்குட்பட்ட நாடுகளிலிருந்து சேனுவீரருஞ் செல்கின்றனர். இலங்கையிலிருந்து 100 பேர்சேர்ந்த பட்டாளமும், இந்தியாவிலிருந்து 150 காலாட்களும், 250 குதிரைவீரருஞ்சேர்ந்த பட்டாளமுஞ் செல்கின்றன.

ஆனிமாதம் 26 ந் திகதி எட்டுவேட் அரசர் தரிக்கும்படி செய்யப்பட்டிருக்கும் கிரீடத்தின்நிறைஎழுஇருத்தல். நான்காம் உவில்லியம், நான்காம் ஜோர்ச் அரசர்கள் சூடிய முடிகளின்நிறையும் எழுஇருத்தலே. விக்தோரியா இராணியார் தரித்த மகுடநிறை மூன்றரைஇருத்தல். இக்கிரீடங்கள் பெருந்தொகைப்பணஞ் செலவழித்துச் செய்யப்படுகின்றன. இரண்டாம் சாள்ஸமன்னர் சூடுவதற்காய்ப் பெருந்தொகைப்பணஞ்செலவுசெய்து ஓர் முடிசெய்யப்பட்டது. நான்காம்ஜோர்ச் அரசர் முடிதரித்தபோது அதை அழித்து இரண்டிலட்சத்து ஐம்பதினாயிரம்பவுண் செலவுசெய்து ஓர் புதிய கிரீடம் செய்யப்பட்டது. விக்தோரியாராணியார் சிம்மாசனபதியானபோது மூன்றிலட்சத்து அறுபதினாயிரம்பவுண் செலவிட்டு ஓர் புதிய கிரீடஞ்செய்யப்பட்டது. அக்கிரீடத்தில் 11 மரகதங்களும, 17 புட்பராகங்களும், 4 மாணிக்கங்களும், 2783 வயிரங்களும், 277 முத்துக்களும் பதிக்கப்பட்டிருந்தன.

இராயரின் முடிசூட்டுத்தினத்தில் லண்டன்பட்டினமானது விபரிப்புக்கடங்காக் காட்சிகள்கொடுக்க, மற்றும் அங்கிலேயநாடுகளிலும் பெருங் கொண்டாட்டங்கள் நடைபெறும். இலங்கையிற் கொண்டாட்டத்தையொழுங்குசெய்ய நியமிக்கப்பட்ட காரியஸதர்கள், விக்தோரியாராணியின் வச்சிரயூபிலிக் கொண்டாட்டம் நடத்தியவகையாய் சோபனோபசாரபத்திரமனுப்பல், ஏழைகளுக்கன்னமளித்தல், பட்டணத்தைச் சிங்காரஞ்செய்தல் வாணவேடிக்கை. தீபமேற்றல் ஆகியன நடைபெறல்வேண்டுமெனத் தீர்மானித்து, அதற்காய் 6000 ரூபா அரசாட்சியார் அநுமதிசெய்தல்வேண்டுமெனக் கேட்டிருக்கின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலுங் கொண்டாட்டங்கள் நடைபெறற்கான அருட்சிகளுண்டாயிருக்கின்றன.

### வரிகளைப்பற்றிய விசாரணை.
### Taxation Commission.

இலங்கையிலே அரசாட்சிக்குரும்படிக்காக அறவிடப்படும் வரிகளைப்பற்றிய நயநட்டங்களையும் அவற்றிற் செய்யப்படவேண்டிய திருத்தங்களையும் ஆலோசித்துத் தீர்மானஞ்செய்யும்படி றிட்சுவே தேசாதிபதியவர்கள் சில காரியஸ்தரைச் சென்றுபோன வருடத்தில் நியமனஞ்செய்திருந்தது அனேகரறிந்த விஷயம். கொலோனியல் சக்கிடுத்தார் மெஸ. இம்தேண் அவர்களைத் தலைமையாய்க்கொண்ட இக் காரியஸ்தர் சென்ற மாதத்தில் இருமுறை கூட்டங்கூடி. இலங்கையிலிடப்பட்டிருக்கும் வரிகளில் இன்ன இன்ன மாறுதல்கள் செய்யப்படல்வேண்டுமென ஐரோப்பியதோட்டத்துரைமாரும் வர்த்தகர்களுங்கூறிய திருத்தங்களைக்கேட்டு, புகைவண்டிவரிகள், சாராயக்குத்தகைவரி. உப்புவரி. நெல் ஆகிய இறக்குமதிப்பொருள்களில் அறவிடப்படும் ரேகுவரி இவற்றைப்பற்றியும், புதியனவாய் நிலவரி, வருமானவரியென்பன ஏற்படுத்தலைப்பற்றியும்ஆலோசனைகூறும்படி வெவ்வேறான உட்காரியஸதரை நியமித்திருக்கின்றனர்.

இலங்கையின் குடிபதிகள் முட்டுப்பாடின்றிச் சுகவாழ்வு பெற்றிருக்க அரசிறைவரும்படியும் மிகச்செழிப்பான நிலையிலிருக்குமிக்காலத்திலே வரிகளைப்பற்றி யோசனைபண்ணவேண்டிவந்த காரணமேதென யாரும் வினவுதல்கூடும். றிட்சுவே தேசாதிபதியவர்கள் வரிகளைப்பற்றி விசாரணைசெய்யும்படி காரியஸதரை நியமித்தகாரணம், ஐரோப்பியதோட்டத்துரைமார் இனம்பித் தம்மேற் பொறுத்திருக்கும் பாரத்தினோர்பகுதியைச் சுதேசிகள்மேற் சுமத்திவிடக் கூக்குரல் பண்ணியதேயாம். இலங்கையிலே விளையும் தானியங்கள்பேரில் நெடுங்காலமாய் அறவிடப்பட்டுவந்த நெல்வரியும் சிறுதானியவரியும் நீக்கப்பட்டுப்போனமையால் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து இலங்கையில் இறக்கப்படும் அரிசி நெல்லின்மேல் அறவிடப்படும் தீர்வையும் நீக்கப்படல்வேண்டுமென்பதும், புகைவண்டிகளிலேற்றப்படுஞ் சாமான்களுக்கு இடப்படும்வரி குறைக்கப்படல்வேண்டுமென்பதும், ஆயிரம் பதினாயிரக்கணக்கான கூலிச்சனங்களுக்கு நெல் அரிசி வாங்கிக்கொடுத்துத்தாபரிப்பவர்களும், இலங்கையின் மலைநாடுகளுக்கும் கொழும்புத்துறைமுகத்துக்குமிடையில் புகைவண்டிமூலமாய்ச் சாமான்கள் அனுப்புபவர்களுமாகிய ஐரோப்பியதோட்டத்துரைமாரும் வர்த்தகர்களும் அவர்களைச்சார்ந்த புதினப்பத்திராகாரரும் இடும் ஓலங்களாயிருக்கின்றன. தோட்டத்துரைமார் இவற்றில் அனுகூலமடைவரேல் குறைந்தசெலவுடன் தோட்டச்செய்கைகள் நடத்தவும் தேயிலையாதிய சாமான்களைப் புகைவண்டிமூலம் அனுப்பவும் இயன்றவராவர்.

தோட்டத்துரைமார் கேள்விப்படி அரசாட்சியார் அரிசி நெல்லின் தீர்வையை நீக்கி, புகைவண்டியிற் சாமான்களேற்றுவதற்குரிய வரிகளையுங் குறைப்பார்களா

யின், புதிய சில வரிகளை ஏற்படுத்துவார்களென்பது நிச்சயம். அப்படிப் புதியனவாய் ஏற்படுத்துவதற் காலோசனைசெய்யப்படும் வரிகள் யாவை? நிலவரி வருமானவரி என்பனவாம். இவற்றைக்குறித்து அடுத்த சங்கியையிற் கவனிப்போம்.

## தேன் ஆபிரிக்க யுத்தம்.
## South African War.

தென்ஆபிரிக்க யுத்தத்தை நடத்தபவராகிய லோட் கிச்செனரோடு சமாதானம் பேசும்நோக்கமாய், சோக்பேக்கர், மேயர், ஸறீன், டீயுவெற், டீலாறி, போதா ஆகியாம் போவர்தலைவர்கள் சித்திரைமாதம் 10 ந் திகதவரையிற் பிறிற்ரோறியா நகர் சேர்ந்தார்கள். 14 ந் திகதி திங்கட்கிழமை சமாதானப்பேச்சுநடத்தத்தொடங்கி முதலாவதாய்ச் சமாதானப்பேச்சு நடத்துவதற்காய்ச் சிலநாட்களுக்கு யுத்தத்தை நிறுத்தல்வேண்டுமெனக் கேட்டனர். லோட் கிச்செனர் அதற்குப் பிரியப்படாது மறுத்துவிட்டனர். செவ்வாய்க்கிழமை நடத்திய சம்பாஷணையில் போவர்கள் முற்றாய்க் கீழடங்கி அங்கிலேயர்கையிற் தம்மையொப்புக்கொடுக்கும்போது, கலகக்காரர் ஊரைவிட்டுத் துரத்தப்படுவார்களென முன்னேசெய்த விளம்பரத்தைக் கொண்டுசெலுத்தாது எல்லார்க்கும் மன்னிப்பருளல்வேண்டுமென்றும், அங்கிலேய பிரசைகளாயிருந்தும் போவர்களோடுசேர்ந்து அங்கிலேயர்க்கெதிராய்ச் சண்டைபண்ணிய கேப்கலனிக் குடிபதிகளுக்கும் அவ்வித மன்னிப்புக்கொடுக்கப்படல்வேண்டுமென்றும், சீக்கிரத்தில் இப்போதிருக்கும் இராணுவ ஆளுகைமுறையை மாற்றி மற்றுங் கலனிகளிலிருப்பதுபோன்ற நிலையான ஆளுகைமுறை ஸ்தாபிக்கபபடல்வேண்டுமென்றும் போவர் தலைவர்கள் கேட்டனர். லோட்கிச்செனர் இக்கேள்விகளை இங்கிலந்திலுள்ள மந்திரிமாருக்கறிவிக்க, அவர்கள் தங்களுடைய எண்ணங்களையே சாதித்து மறுமொழியனுப்பினர். நிலையான அரசாட்சிஸதாபனமாகும்போது போவர்களிலும் இரண்டொருவரை உயர்ந்தஉத்தியோகத்தில்வைத்துக் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதற்கு லோட் மில்னருக்குஅதிகாரங்கொடுக்கப்பட்டது. போவர்தலைவர்கள் அங்கிலேயமந்திரிமாரின் எண்ணங்களுக்கிசைந்தவர்களாய்த் தமதுசனங்களுடன் ஆலோசனை பண்ணிவரும்படி பிறிற்ரோறியாவை விட்டு உள்நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். அவர்களாங்காங்கு சென்று வைத்த கூட்டங்களில் சனங்கள் மிகுதியும் அங்கிலேயர்க்குக் கீழடங்கிப்போகுஞ் சார்பு காட்டியிருக்கின்றனர். மகுடாபிஷேகதினங் கிட்டிவருவதால் அதற்குமுன் யுத்தத்தை முடிவுகட்டிப்போடல்வேண்டுமெனனும்அவாவினுல் அங்கிலேயர் தமது கேள்விகள் சிலவற்றிற்காகுதல் சம்மதிக்கக்கூடுமென்னுமெண்ணத்தினுலேயே போவர்கள் முடிவுசொல்வதற்குக் காலதாமதம்பண்ணுகின்றனராம்.

திரான்ஸ்வாலின் அரசிறைவருமானம் வரவர அதிகரித்துவருகின்றது. சென்ற வருடவருமானம் 12 லட்சம் பவுண். வரும்வருட வருமானம் 40 அல்லது 50 லட்சமாயிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது இங்கிலந்தின் செலவில் போவர்நாடுகளில் நிறுத்தப்பட்டிருக்கும் 10 000 பொலீசுமாரில் 6000 பேரும் ஆடிமாதம் தவக்கமாய் அந்நாடுகளின் வருமானத்திலிருந்து சாபரிக்கப்படுவாரென லோட் மில்னர் கூறுகின்றனர். உத்தியோகஸ்தரின் சம்பளம், பழய அரசாட்சியின் கடனின்வட்டி, புகைவீதிக் கடனின் வட்டிஎன்பன அந்நாடுகளின் வருமானத்திலிருந்தே கொடுக்கப்படுகின்றன. இனிமேல் யுத்தச்செலவினேர்பாகமும் அந்நாடுகளிலேயே சுமத்தப்படுமாம்.

## யாழ்ப்பாணம்.

காலநிலை—Weather—சித்திரைக் குழப்பம் துவங்கிவிட, இடிமுழக்கம் மின்னலோடு மழையும்பெய்தது. சோழகக்காற்றும் இடைக்கிடை தென்றலாய் வீசுகின்றது. சோழகக்காற்றுநிலையாய்வீசத்துவங்கும்வரைக்கும் மின்னல் மழை மப்பு மந்தாரம் சிலநாட்களுக்கு நிலைக்கும்போலும். தமிழ்ச்சித்திரை இருபத்தெட்டையடுத்துப் பயலும் அடித்தல்கூடும். சிறுதானிய விளைவுச் சேகரிப்பும் புகையிலைவெட்டியுலர்த்தலும் அமளியாய் நடைபெறுகின்றன.

எம் ஏசண்டர்.—Our Agent—சென்றமாதம் 25ந் திகதி முதல் யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி மெஸ். சாண்டேஷ் அவர்களே தமதுகடமையோடு ஏசண்டர்வேலையையும் பார்க்கின்றனர் புதிய ஏசண்டர் மெஸ். லூயிஸ் இந்தமாதக்கடைசிவரையில் வந்துசேர்வர்.

